05.08.2026

O.S.No. **431/2015**

PW1- **கிருஷ்ணன் – த/பெ மாடசாமி**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.08.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1 முதல் 4,7,9,10,12 பிரதிவாதிகள் தரப்பில்)

1. பிராது 1ம் தபசில் சொத்து 10.09.2021 ம் வருடத்திய ஆவணத்தின் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

2. பிராது 1ம் தபசில் சொத்தின் சர்வே எண்.322/7 என்றும் அதன் விஸ்தீரணம் மொத்தம் 14 சென்ட் உள்ளது என்றால் சரிதான்.

3. நான் பிராது 1ம் தபசில் சொத்தில் 6 சென்ட் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதன் கிழமேல் 10.9 மீட்டர் அதாவது 35.75 அடி என நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4. தவறாக சர்வே செய்யப்பட்டது குறித்து நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

5. 10.09.2021ம் தேதிய கிரைய ஆவணத்தில் சர்வே எண் 322/7 குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6. என் தாத்தா முத்தையா தேவர் கிரைய ஆவணத்தில் ஜமீன் அடங்கல் புஞ்சை 2723 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. ஜமீன் அடங்கல் புஞ்சை 2723 தான் தற்போது சர்வே எண் 322/7 என மாறியுள்ளது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

8. என் தாத்தா முத்தையா தேவர் கிரைய ஆவண சொத்து தான் பிராது 1ம் தபசில் சொத்து என்பதை காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் பத்திரத்தில் உள்ள எல்கை மால் சரியாக உள்ளது.

9. பிராது 1ம் தபசில் சொத்திற்கு என் பெயரிலோ, என் அப்பா பெயரிலோ பட்டா இல்லை என்றால் சரிதான்.

10. பிராது 1ம் தபசில் சொத்தில் வீடு உள்ளது என்றால் சரிதான் வடகடைசியில் உள்ளது.

11. பிராது 1ம் தபசில் சொத்தானது பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது என்றால் சரியல்ல தெற்கு தெருவில் உள்ளது.

12. பிராது தபசில் சொத்து 3வது வார்டில் உள்ளது என்றால் சரியாகத் தெரியாது இருக்கலாம்.

13. பிராது சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.6 என்றால் சரிதான் ஆதிகாலத்தில் இருந்தே அந்த கதவு எண் உள்ளது.

14. பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கு என் பெயரிலோ, என் தகப்பனார் பெயரிலோ தீர்வை ரசீது இல்லை என்றால் அது என் வீடு இல்லை.

15. எவ்வாறு பிராது 2ம் தபசில் சொத்து எனக்கு பாத்தியம் என நான் கூறுகிறேன் என்றால் என்னுடைய கிரைய பத்திரத்தில் கைவச எல்கை மால் என குறிப்பிட்டுள்ளதால் நான் உரிமை கோருகிறேன்.

16. வா.சா.ஆ.1 ஆவணத்தை யார் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் வைகுண்ட தேவர் மகன் சுந்தர தேவர் எழுதிக்கொடுத்தார்.

17. வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய கைவச நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல கைவச நிலத்திற்கு தெற்கு என உள்ளது.

18. என் தாத்தா முத்தையா தேவர் கிரைய பத்திரத்தை நீதிமன்றம் குறியீடு செய்ய மறுத்த பட்சத்தில் அதன் பேரில் ஏதேனும் மேல்முறையீடு செய்துள்ளோனா என்றால் செய்யவில்லை.

19. 2ம் தபசில் சொத்திற்கு பட்டா தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை.

20. 2ம் தபசில் சொத்திற்கு என் பெயரில் பதிவு பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் சுந்தர தேவர் எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு பெறாத கிரைய ஆவணத்தில் எல்கை மால் ஆக உன்னுடைய

கைவச மனைக்கு வடக்கே என குறிப்பிட்டுள்ளார். அந்த ஆவணத்தை நான் குறியீடு செய்யவில்லை என்றால் சரியல்ல.

21. 2ம் தபசிலாக குறிப்பிட்டுள்ள சர்வே எண் 322/7 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

22. சர்வே எண் 322/7 எனக்கும் என் தந்தைக்கும் உரிமையானது என நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

23. வருவாய் ஆவணங்களின் படி சர்வே எண்.322/7 தென்வடலாக 223 அடி உள்ளது என்றால் சரிதான் எனக்கு 160 அடி மீதமுள்ள இடம் பிரதிவாதிகளுக்கு உரியது.

24. தாவா சொத்து போகநல்லூர் ஜமீன் கிராமமாக இருந்தது என்றால் சரிதான்.

25. ஜமீன் ஒழிப்பிற்கு பின்னர் வீரபாண்டித்தேவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான்.

26. வீரபாண்டி தேவர் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் என்றால் சரிதான்.

27. ஜமீன் ஒழிப்பிற்கு பின் வீரபாண்டி தேவர் பெயரில் பட்டா ஏற்பட்டதை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எனக்கு விவரம் 2008 ல் தான் தெரியவந்தது. அதன்பின் நடவடிக்கை எடுத்தேனா

என்றால் முதலமைச்சர் தனிபிரிவு மற்றும் ஆட்சியர் திருநெல்வேலிக்கு மனு கொடுத்தேன்.

28. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா எண்.1574–ல் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் உள்ளது என்றால் சரிதான்.

29. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1,3 ஆவணங்களில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

30. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.3–ற்கும் வழக்கு சொத்திற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

31. பிராது சொத்தின் வடபுறம் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் 1931 வருடத்திய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

32. எனக்கும் என் சகோதரர் முருகனுக்கும் 4 வது வார்டில் ஆசாரி சமுதாய தெருவில் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டு எண் தெரியுமா என்றால் தெரியாது.

33. 4 வது வார்டில் உள்ள வீட்டை என் சகோதரர் எனக்கு விட்டுகொடுத்தார் என்பதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை.

34. தபசில் சொத்தை என் சகோதரர் எனக்கு விட்டு கொடுத்ததற்கு நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பதிவு பெறாத பாக கைத்தடி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

35. பதிவு பெறாத பாக கைத்தடி ஆவணத்தை குறியீடு செய்ய இயலாது என்பதால் அதனை குறியீடு செய்ய நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

36. தாவா சொத்தை பொறுத்து என் சகோதரர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை.

37. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான் வா.சா.ஆ.2 சொத்தை மீட்டு கொடுத்ததால் பிராது 1ம் தபசில் சொத்தை எனக்கு கொடுத்தார்கள்.

38. நாங்கள் தான் வா.சா.ஆ.2–ஐ மீட்டோம் என்ற விவரம் துலங்காது என்றால் சரியல்ல ஆவணத்தில் பின்புறம் குறிப்பு உள்ளது. மேற்படி குறிப்பு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

39. மேற்படி குறிப்பில் என் தாத்தாவின் சகோதரர் ராமசாமி கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

40. வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

41. 1,2 தபசில் சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பூர்விக பாத்திய சொத்துக்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் 1ம் பிரதிவாதி தகப்பனாரின் சகோதரர் சண்முக தேவர் கிரையம் பெற்ற சொத்துக்கள்.

42. சண்முக தேவரின் வாரிசாக பேச்சிமுத்து தேவரோ, வீரபாண்டி தேவரோ வரமாட்டார்கள் என்றால் சரிதான்.

43. வா.சா.ஆ.1, 9 சொத்திற்கும், தபசில் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

44. பிராது 1,2 தபசில் சொத்துக்களுக்கு உரிமை மாற்றம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

45. 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு வாரிசு அடிப்படையில் 1,2 தபசில் சொத்துக்கள் கிடைக்கப்பெற்று அவர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவித்து வந்து 1ம் பிரதிவாதியின் வாரிசு நிலைமையில் தாவா சொத்துக்களை அடைந்து பட்டா,சிட்டா பெற்று வழக்கு 2ம் பிரதிவாதிக்கு தென்பகுதியில் பாதை ஏற்படுத்தி வடபகுதியை கிரையம் செய்தும் தென்பகுதியை வழக்கு 3ம் பிரதிவாதிக்கு ஏற்பாட்டு ஆவணம் பிறப்பித்து கொடுத்து மேற்படியார்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

46. வடபகுதியினை கிரையம் பெற்ற 3ம் பிரதிவாதி அதில் உள்ள வீட்டிற்கு 3ம் பிரதிவாதி பெயரில் வீடு வரி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல.

47. 3ம் பிரதிவாதி 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு ஏற்பாட்டு ஆவணம் மூலம் 1,2 தபசில் சொத்துக்களை பாத்தியப்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல.

48. வழக்கிற்கு பின்பு 4 முதல் 7 பிரதிவாதிகள் 21.02.2019ம் தேதிய ஆவண எண் 911/2019ன் மூலம் பழனிச்சாமி என்பவருக்கு கிரையம் கொடுத்து மேற்படியார்கள் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல பழனிச்சாமி வீடு கட்டியுள்ள விவரம் தெரியும். பழனிச்சாமி 4 முதல் 7 பிரதிவாதிகளின் சகோதரியின் கணவர் ஆவார்.

49. தென்பகுதி சொத்தினை 3ம் பிரதிவாதி 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து 8ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவம் செய்து வரும் நிலையில் 8ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் 9 முதல் 12 பிரதிவாதிகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் 8ம் பிரதிவாதி முத்துகுமார் என்பவர் வீடு கட்டினார்.

50. நான் கடந்த 08.08.2011ம் தேதி 1ம் பிரதிவாதி மீது மாவட்ட ஆட்சித்தலைவருக்கு மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அப்போது காவல் நிலையத்திலும் புகார் கொடுத்தேன்.

51. 2012ம் வருடம் நான் இலவச சட்ட உதவி மையத்தில் மனு கொடுத்தேன் என்றால் சரிதான்.

52. நான் புகார் கொடுக்கும் போதே 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

53. 2011, 2012 காலங்களில் தாவா சொத்து சம்மந்தமாக நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் இலவச சட்ட உதவி மையத்தில் புகார் கொடுத்தேன்.

54. நான் உரிய காலத்தில் வழக்கு தாக்கல் செய்யாததால் என் வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

55. 1ம் பிரதிவாதி ஏற்படுத்திய கிரைய பத்திரத்தை ரத்து செய்ய நான் ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

56. தாவா சொத்தில் தென்பகுதியில் 8ம் பிரதிவாதி 2019ம் ஆண்டு வீடு கட்டினார் என்றால் சரிதான்.

57. வடபகுதியில் 1ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான்.

58. தாவா சொத்தின் அனுபவம் வசம் இல்லாத நிலையில் விளம்புகை மற்றும நிரந்தர தடையாணை பரிகாரம் கோர முடியாது எனவும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரவேண்டும் என்றால் சரியல்ல.

59. நான் 2010 ம் வருடம் முதல் தபசில் சொத்தில் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான்.

60. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தபசில் சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும் பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை அபகரிக்க தவறான வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

61. வா.சா.ஆ.1,3,9 ஆவணங்கள் தபசில் சொத்திற்கு தென்புறம் உள்ள இடம் என்றும் அவை தபசில் சொத்திற்கு சம்மந்தம் இல்லாதவை என்றால் சரியல்ல.

62. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் எனவே என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
தென்காசி